
## திராவிடத்தால் வாழ்கிறோம்

965

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

28

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# ஆதிக்கத்தை எதிர்க்கும் துணிச்சல்!

நீதிக்கட்சி காலம்தொட்டே, நெல்லை மாவட்டத்தின் மேல் பகுதி திராவிட இயக்க உணர்வாளர்களை நிரம்பக் கொண்டிருந்தது. 1944–ஆம் ஆண்டு சேலத்தில் நீதிக்கட்சி, திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டபோது, அன்றைய நெல்லை மாவட்டத்தின் அங்கமாக இருந்த தூத்துக்குடி, கோவில்பட்டி, கீழ ஈரால், கீழப்பாவூர், அடைக்கலப்பட்டணம், மேல பட்ட முடையார்புரம் பகுதிகளில் திராவிடர் கழகக் கிளைகள் துளிர்த்தன.

அந்தக் காலகட்டத்தில் தந்தை பெரியார் பாவூர்சத்திரத்தில் பல நாட்கள் தங்கியிருந்து, நெல்லையின் மேல்புறப் பகுதிகளில் தீவிரப் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளார். அதன் விளைவாக, கல்லூரணி செல்லக்கனி, சுப்பையா, சிவநாடானூர் சிவனனைந்த பெருமாள், ராமையா, கீழப்பாவூர் பி.ஆர். சிவன், அருள் பாண்டி, மேல பட்டமுடையார்புரம் இளங்கோ, முப்பிடாதி முத்து, செல்லத்துரை, கழுநீர்குளம் ராஜா என ஊர் ஊருக்கு திராவிடர் கழகத் தொண்டர்கள் சமூகச் சிற்பிகளாக உருவாகினர்.

அதன்பிறகு, 1949–ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா தொடங்கியபோது, தென்காசி வட்டாரம் முழுவதும், தி.மு.க. கிளைகள் உருவாகின. அதில், நெல்லை மாவட்டப் பொருளாளராக இருந்தவர், கீழப்பாவூர் பி.ஆர்.வைகுண்டம். தி.மு.கழகம் முன்னெடுத்த மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்று, கீழப்பாவூரில் இருந்து ஜெ.பெரியமணி, சு.பெரியசாமி, சு.சண்முகநாதன், இரா.தங்கவேல் ஆகியோர் சிறை சென்றனர். ஆனால் கீழப்பாவூரைப் பொறுத்தவரையில், யார் திராவிட முன்னேற்றக் கழகம், யார் திராவிடர் கழகம் என்றே கண்டுபிடிக்க இயலாத அளவுக்குப் பின்னிப்பிணைந்து இயக்கம் வளர்த்தனர்.


மும்முனைப் போராட்டத்தில் சிறை சென்றவர்கள்

அதற்கு ஒரு சிறந்த உதாரணம், 1958–இல் பெரியாரின் கீழப்பாவூர் பயணம். வி.மா.முத்தரசு, சுருட்டை இராமசாமி, கே.ஆர். என்ற இராமசாமி ஆகியோரின் முயற்சியால் பெரியார் கீழப்பாவூருக்கு அழைக்கப்பட்டிருந்தார். பெரியாருடன் அன்னை மணியம்மையார், ஆசிரியர் கி.வீரமணி ஆகியோரும் வந்திருந்தனர். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே அதற்கு முன்பும், பின்பும் என எப்போதும் இல்லாத வகையில், 56 அடி உயர முழுப் பனைமரத்தைக் கொடிக்கம்பமாக நட்டுவைத்து, அதில் திராவிடர் கழகக் கொடியை ஏற்றினர்.


பெரியார் திடல், கீழப்பாவூர்

அந்த விழாவில், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் பங்கேற்றனர்.

சாதிக்கு ஒரு குடிநீர்க் கிணறு மறைந்து பொதுக்கிணறுகள் உருவாக்கப்பட்டன. நுழையவே மறுக்கப்பட்ட தெருக்களில் எல்லாம், ஒடுக்கப்பட்டோரை நுழையச் செய்தனர்.

சாதியத்துக்கு எதிரான இந்தக் களப்பணிகளில் தி.மு.க.வும், தி.க.வும் பாரபட்சமின்றி செயல்பட்டன. குறிப்பாக, தி.மு.க.வைச் சேர்ந்த அரு.இராமநாதன் தாழ்த்தப்பட்டோர் வீட்டில் உணவு உண்டார் என்பதற்காகவே, உறவினர்களால் மாட்டு வண்டியில் கட்டி வைக்கப்பட்டு கொடுந்தாக்குதலுக்கு உள்ளானார்.

ஆனால், அரு.இராமநாதனின் உறவினர்களில் மற்ற பலர், அந்தத் தாக்குதலை எதிர்க்கும் துணிவு கொண்டிருந்தனர். அதுவரை அரசியலில் ஈடுபடாமல் இருந்த அவர்கள் அரு.இராமநாத னோடு இணைந்து, தி.மு. கழகத்தில் செயல்படத் தொடங்கினர். இப்படி தி.மு.க.வின் பலமும், தி.க.வின் பிரச்சாரமும் கீழப்பாவூரை, பகுத்தறிவு பூமியாக்கியது; சாதியவாதிகளின் கொட்டத்தை அடக்கச் செய்தது.

...பயணிப்போம்.

## அதிர்ச்சியளிக்கும் வாக்காளர் பட்டியல்!

பாரதிய ஜனதா கட்சி, 'வாக்காளர்களின் வாக்குகளைத் திருடி ஆட்சி அமைக்கிறது' என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாகக் குற்றம் சாட்டி வருகின்றன.

வலுவான ஆதாரங்களை வைத்து, மக்கள் மத்தியில் பா.ஜ.க.வை அம்பலப்படுத்திவரும் நிலையில், தற்போது புதிய மோசடியாக உத்தரபிரதேசத்தில் ஒரு கிராமத்தில் ஒரே வீட்டில் 4,271 வாக்காளர்கள் இருப்பதாக தேர்தல் ஆணையத்தின் வரைவுப் பட்டியல் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குல்பஹார் வட்டத்தில் உள்ள, ஜெய்த்பூர் என்கிற கிராமத்தில் 4,271 வாக்காளர்கள் ஒரே வீட்டு எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதே கிராமத்தின் வேறு சில வீட்டு எண்களில் 300 பேர், 400 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். வாக்காளர் பட்டியல் சோதனையின்போது, இந்த விவரங்கள் தெரிய வந்து அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அந்த வீட்டு எண்ணில் வசிப்பவர்களும் இந்த விவரங்கள் தெரிய வந்து அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இது தொடர்பான புகார்களுக்கு, "கிராமங்களில் உள்ள பெருவாரியான வீடுகளுக்கு எண்கள் இல்லை. அதனால், ஒரே எண் பதிவு செய்யப்பட்டிருக்கலாம்" என அதிகாரிகள் அலட்சியமாகப் பதில் அளித்துள்ளனர்.

2021–ஆம் ஆண்டுக்குப் பின்னர், வாக்காளர் பட்டியல் திருத்த திட்டம் நடைபெற்று வரும் நிலையில், மிகப்பெரிய மோசடியை நிர்வாக அலட்சியம் எனப் பூசி மெழுகப் பார்க்கிறது, அம்மாநிலத் தேர்தல் ஆணையம். உண்மையான மக்களாட்சியை உள்ளிருந்தே சிதைக்கும் பா.ஜ.க.வின், நோக்கத்துக்கு ஏற்ப தேர்தல் ஆணையம் செயல்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கு, மேலும் வலு சேர்க்கிறது உ.பி. ஜெய்த்பூர் கிராமத்தின் வாக்காளர் பட்டியல்.

## ப்ளாஷ்பேக்



## இதய சிம்மாசனத்தில் தலைவரின் நினைவுகள்!


கவுந்தி இராஜேந்திரன்

2010–ஆம் ஆண்டு, தலைவர் கலைஞர் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்திக்கும் வாய்ப்பு, எளிய தொண்டனாகிய எனக்கும் அமைந்தது. அந்த சந்தர்ப்பத்தில் தலைவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம், எத்தனை ஆண்டுகளானாலும் தலைவரின் நினைவுகள் இதய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும்.

– கவுந்தி இராஜேந்திரன்,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
பவானி, ஈரோடு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

78

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# எதிரிகளுக்கு அஞ்சாத கழகம்!



***புதிய எதிரிகள் என்று கழகத் தலைவர் தனது 'உங்களில் ஒருவன்' கடிதத்தில் குறிப்பிட்டதால், புதிதாகக் கட்சி ஆரம்பித்தவர்களைப் பார்த்து, தி.மு.க. பயந்துவிட்டதாக விமர்சிக்கிறார்களே?***

தி.மு.க.வை விமர்சித்தால்தான் தங்களுக்கு அரசியல் அடையாளம் கிடைக்கும், தங்களை இயக்குகின்ற எஜமானர்களிடமிருந்து லாபங்கள் கிடைக்கும் என்பதால், தமிழ்நாட்டில் கடந்த அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக யார் கட்சி தொடங்கினாலும், தி.மு.க.வை விமர்சிப்பதுடன், 'தி.மு.க.வை அழித்துவிடுவேன், ஒழித்துவிடுவேன்' என்று பேசுவது வழக்கமாக இருக்கிறது. புதிய எதிரிகள் என்று கழகத் தலைவர் சொன்னதும், இந்தப் பட்டியலில் புதிதாகச் சேர்ந்திருப்பவர்களுக்குப் பொறுக்கவில்லை. தி.மு.க பயப்படுகிறது என்று தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்கிறார்கள்.

1949–இல் தி.மு.க என்பதே புதிய கட்சிதான். யாரிடம் சமுதாயம் - அரசியல் ஆகியவற்றின் கொள்கைத் தத்துவங்களை, தி.மு.க.வினர் கற்றார்களோ அந்தப் பெரியாரே தி.மு.க.வை அப்போது கடுமையாக விமர்சித்தார். 'தாய் யானை தன் குட்டிகளைப் பழக்குகிறது', என்று அதைப் பக்குவமாக எதிர்கொண்டார் அண்ணா. இந்தியா முழுவதும் செல்வாக்குடன் இருந்த காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவராக இருந்த ராஜாஜி, அதன்பிறகு காமராஜர், இன்னொருபுறம் கம்யூனிஸ்ட்டுகள், தி.மு.க.வினரை அவ்வப்போது சீண்டிக் கொண்டிருந்த 'தமிழரசு கழகம்' எனப் பல தலைவர்களை, தி.மு.க. எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், அது மக்களின் மனங்களை வென்று, 1967–இல் ஆட்சியைப் பிடித்தது.

ஜாம்பவான்களான பழைய எதிரிகளைக் கண்டே பயப்படாத கட்சி தி.முக... அரசியலில் எதிர்துருவமாக இருந்த அத்தனை கட்சித் தலைவர்களுடனும் மேடையைப் பகிர்ந்து கொள்ளும் அரசியல் பண்பாடும், பொதுநலன் சார்ந்து ஒன்றிணைந்து நிற்கும் நாகரிகமும் கொண்டது தி.மு.க.

பின்னர், தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர் பிரிந்து, அ.தி.மு.க. தொடங்கினார். தேர்தல் களத்தில் சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும், தி.மு.க.தான் அப்போதும் தமிழ்நாட்டு அரசியலை இயக்குகின்ற மைய விசையாக இருந்தது. புது எதிரியைக் கண்டு பயப்படவில்லை. காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் பல வடிவங்களில் வெளிப்பட்டிருக்கிறது. தி.மு.க.வைக் கடுமையாக எதிர்த்த பழைய காங்கிரஸ் தலைவர்கள் உண்டு. பழைய எதிரிகள் என்று தி.மு.க. பின்வாங்கிவிடவில்லை.

பா.ம.க, தே.மு.தி.க, நா.த.க எனப் பல கட்சிகள் உருவானபோதும் தி.மு.க.வை விமர்சிப்பது தங்களுக்கான அரசியல் அடையாளமாக முன்னெடுக்கப்பட்டது. தி.மு.க. என்ற இயக்கம் கட்டுக்கோப்பாக நின்றது. புதிய தலைமுறை இளைஞர்களை ஈர்த்தது. 6–வது முறையாகவும் ஆட்சியை அமைத்து சாதனைகளைத் தொடர்கிறது. இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சி 75 ஆண்டுகள் நிலைத்திருப்பதும், தன் பவள விழாவில் ஆளுங்கட்சியாக இருப்பதும் தி.மு.க. என்ற இயக்கம் மட்டுமே. காலந்தோறும் எதிரிகள் புதிது புதிதாக வருவார்கள். பழைய எதிரிகள் இருப்பார்கள். நேரடி–மறைமுக எதிரிகள் எந்த வகையில், வந்தாலும் தி.மு.க. துணிந்து தன் பயணத்தைத் தொடர்ந்தபடியே இருக்கும்.

...வினா தொடரும்.

## நம் வரலாறு

### இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாடு!

5-10-1963, 6-10-1963 ஆகிய தேதிகளில் திருச்சி மதுரம் விளையாட்டுத் திடலில் மாணவர் இந்தி எதிர்ப்பு சிறப்பு மாநாடு நடைபெற்றது. சின்னதுரை மாநாட்டைத் தொடங்கி வைத்தார். க.அறிவன் மாநாட்டின் குறிக்கோளை விளக்க, எம்.எஸ்.வெங்கடாசலம் வரவேற்புரை ஆற்றினார். பேரறிஞர் அண்ணா, காயிதே மில்லத், ராஜாஜி ஆகியோர் சிறப்புரை ஆற்றியது, இந்த மாநாட்டின் சிறப்பாக வரலாற்றில் பதிந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131